**மஹர பிரதேச சபை - 2022**
---------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 பாதகமான அபிப்பிராயம்

மஹர பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் உபபிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமா்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக, மஹர பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உள்ளுராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தரவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பாதகமான அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை உள்ளுராட்சி நிறுவனங்களுக்காக இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமா்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மாநகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுமானத் தேய்வுப் பெறுமதி ரூபா 1,221,807 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் இறுதிக் கணக்குகளில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீண்டுவரும் அல்லாத செலவுகளுக்காக அரசாங்கத்தினால் மாற்றப்பட்டிருந்த ரூபா 853,255 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | 3 வெளி நிறுவனங்களின் நிர்மாணிப்பு வேலைக்காக கிடைத்திருந்த ரூபா 2,416,434 தொகைக்கான மூலதன மானியம், மூலதன மானியக் கணக்கிலும் மற்றும் நடைமுறை வேலை கணக்கிலிருந்து அகற்றியிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | நிர்மாணவேலை கடன்கொடுத்தோர் ரூபா 18,700,715 தொகை பதிவழிக்கும் போது நடைபெறு வேலை கணக்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் திரண்ட நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| (உ) 2021 ஆண்டின் நூலக புத்தக பெறுமானத்தேய்வு பெறுமதி ரூபா 1,359,071 தொகை கணக்கீடு செய்யப்படாத தவறினை சரி செய்யும் போது திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பதற்கு பதிலாக பெறுமானத் தேய்வுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் படி தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 118,952,135 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) அகல்விரிவான வருமானக் கூற்றில் ஏனைய அகல்விரிவான வருமானத்தின் கீழ் ஆண்டிற்கான மிகை/ பற்றாக்குறை இனங்காண வேண்டியிருந்த மூலதனச் செலவுகளின் பெறுமதியை கழித்து காட்டியிருக்காமையால் ஆண்டிற்கான அகல்விரிவான வருமானம் ரூபா 19,136,542 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் முன்னைய காலப் பகுதிக்கான தவறுகள் சீராக்கல் மேற்கொள்வதற்காக 7 நாட்குறிப்புக்களின் பெறுமதியாகிய ரூபா 38,441,384 தொகை திரண்ட மிகைக்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 39,147,467 தொகை செலவு வைக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 8 கணக்கு விடயங்களுக்குரிய 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு, நிதிக் கூற்றுக்களின் படி கூட்டுப் பெறுமதி ரூபா 259,608,046 தொகை மற்றும் துணைப் பதிவேடுகளின் கூட்டுப் பெறுமதி ரூபா 176,686,926 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 82,921,120 இற்கான வித்தியாசமொன்று அவதானிப்பட்டது. | 2023 ஆண்டு இறுதிக் கணக்குகளின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வித்தியாசங்களை இனங் கண்டு சரி செய்யப்பட வேண்டும். |

**1.7 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 24(1) ஆ | சபை அதிகாரப் பிரதேசத்திற்கு உரிய 3859 பாதைகளில் 3835 பாதைகள் வர்த்தமானியில் வெளியிட்டிருக்கவில்லை. | பாதைகளை அளவை செய்வதற்காக பாரிய தொகையொன்று செலவிடப்பட நேரிடுவதனால் பாதீட்டு ஏற்பாடுகள் மீது அளவைகள் மேற்கொள்ளப்படும் என. | பாதைகளை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபைகளின் நிதி நிருவாகத்திற்குரிய கணக்கீட்டு அலுவல்கள் தொடர்பான விதிகள் | | | |
| | (i) இலக்கம் 90 | நிதிக் கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டுமென சுட்டிக் காட்டிய போதிலும் நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இது தொடர்பாக கவனம் செலுத்தப்படும் என. | நிதிக் கூற்றுக்கள் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| | (ii) இலக்கம் 300 | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சேகரிக்கப்படாத வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணம் ரூபா 376,393 தொகை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகை தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் 2023 இறுதிக் கணக்குகளில் சரி செய்தல் மேற்கொள்தல் என. | விதியின் படி செயற்பட வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 571 | ரூபா 1,612,771 தொகை பெறுமதியான 2 வருடங்களை கடந்துள்ள வைப்பு மீதிகள் மிகைத்துள்ள செய்யப்பட வேண்டும். | இரண்டு வருடங்களை மிகைத்துள்ள வைப்பு வகைகளில் 2023 ஆண்டில் அனுப்பப்பட்ட கோரிக்கை கடிதத்தின் படி மீண்டும் வைப்புக்கள் வழங்குதல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் படி இரண்டு வருடங்களை | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |

மிகைத்துள்ள வைப்புக்களில் ரூபா 1,612,771 தொடர்ந்தும் மீதியாகக் காணப்படுகின்றது என.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 77,588,762 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 85,829,929 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 77,562,990 | 84,062,374 | 76,825,240 | 101,137,252 | 77,388,000 | 80,893,754 | 17,714,748 | 60,881,768 |
| (ii) | வாடகை | 4,666,074 | 4,266,074 | 4,099,420 | 166,654 | 4,841,900 | 4,201,808 | 2,726,507 | - |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,120,000 | 1,120,000 | 743,607 | 376,393 | 1,120,000 | 1,120,000 | 647,200 | - |
| (iv) | ஏனைய வரு மானங்கள் | 1,217,000 | - | 524,258 | - | 1,040,500 | - | 1,747,532 | - |
| | | 83,566,064 | 89,448,448 | 82,192,525 | 101,680,299 | 84,390,400 | 86,215,562 | 22,835,987 | 60,881,768 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றுதல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வீதவரியும் வரியும் | | |
| (i) 2022 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு நிறுவை வீதவரி பெறுமதி ரூபா 60,618,018 தொகையாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டு இறுதியில் | இந்த நிலுவை வீதவரி தொகையை அறவீடு செய்வதற்காக நடமாடும் சேவை நடாத்துதல், வெளிக்களத்தில் சென்று நிலுவை வரி சேகரித்தல், | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நிலுவை வீதவரி வருமானம் அறவீடு செய்வதற்கு |

| | | |
|---|---|---|
| உள்ளவாறு சேகரிக்கப்பட்டு இருக்காத வருமானம் ரூபா 49,828,109 தொகையாக இருந்தது. | கவனயீர்ப்பு கடிதம் அனுப்புதல் செயற்படுத்தப்பட்டிருந்தது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) மீளாய்வாண்டின் கைத்தொழில் வரி சிட்டையிடப்பட்ட பெறுமதி ரூபா 2,080,000 தொகை ஆண்டின் போது சேகரிக்கப்படாத வருமானம் ரூபா 769,450 தொகையாக இருந்தது. | தவறுதலாக மதிப்பீட்டுத் தொகை சிட்டையிடப்பட்டிருந்தது. கொவிட் தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடியினால் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தது என. | கணிப்பீடு மேற்கொண்டு சரியாக கைத்தொழில் வரி சிட்டையிடப்பட வேண்டும். |

(ஆ) நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| | | |
|---|---|---|
| 2020 ஆண்டு முதல் முத்திரைக் கட்டண வருமானம் மற்றும் நீதிமன்றத் தண்டப் பணம் தொடர்பாக அட்டவணைகள் பெற்றுக் கொண்டு வருமானத்தை கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2020 ஆண்டிற்கான அட்டவணைகள் தயாரிக்கப்பட்டுள்ளது என. | அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் சாட்டப்பட்டிருந்த கருமங்கள் நிறைவேற்றுதல்

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) செயல் நடவடிக்கைத் திட்டம் | | |
| ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திற்குமாக ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட தொகை குறிப்பிட்டு வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்திருக்கவில்லை. | 2023 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டுள்ளது என. | சரியான முறையில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் | | |
| தனியார் நிறுவனம் ஒன்று, சபையின் 06 வாகனங்கள் மற்றும் 18 ஊழியர்களை ஈடுபடுத்தி குப்பைகளை அகற்றுவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 36,453,827 தொகை செலவிடப்பட்டிருந்தது. சேதனப் பசளை செயற்களம் ஒன்று நிர்மாணிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையிடம் 10 ஏக்கர் காணியொன்றை உரித்தாக்கிக் கொள்வதற்காக 2021 செப்தம்பர் 03 திகதி மேல் மாகாண உள்ளுராட்சி ஆணையாளருக்கு | இதற்கு முன்னர் சபைக்கு ரூபா 70 மில்லியன் தொகைக்கான செயற்திட்டமொன்று கிடைத்து பணம் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அரசாங்க பெறுமதி மதிப்பீட்டுத் தொகைக்கு காணியின் உரிமையாளர்கள் விருப்பமின்மையால் செயற்திட்டம் செயற்படுத்தப்படவில்லை. | சேதனப் பசளை செயற்களம் ஒன்று நிர்மாணித்து குப்பை முகாமைத்துவம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அனுப்பப்பட்டிருந்த போதிலும் 2023 மார்ச் 14 திகதி அளவிலும் காணி உரித்தாக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் | | |
| (i) | 2000 நவம்பர் 22 திகதிய 1159/22 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானியின் படி சுற்றாடல் அனுமதிப்பத்திரம் ஒன்று காலவதியாவதற்கு 03 மாதங்களுக்கு முன்னர் புதுப்பித்தல் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் சபையின் அதிகாரப் பிரதேசத்தின் 2021 ஜனவரி 21 திகதி முதல் 2023 ஜனவரி 27 வரையான காலப் பகுதியுள் காலவதியாகியிருந்த போதிலும் வர்த்தக அலுவல்கள் மேற்கொள்ளும் 10 வர்த்தக நிலையங்களின் அனுமதிப்பத்திரம் புதுப்படுத்தல் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் இவ் அலுவல்கள் உரிய முறையில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாத நிறுவனங்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டிய நிறுவனங்கள் தொடர்பாக கணிப்பீடொன்று மேற்கொண்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் கணிப்பீட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்படும் என. | கணிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டுத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெற வேண்டிய மீதிகள் | | |
| | நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு இறுதித் தினத்தன்று நிர்மாண வேலை கடன்பட்டோர் மீதி ரூபா 8,231,524 தொகையாகும். | எதிர் காலத்தில் தீர்க்கப்படும் என. | பெற வேண்டிய மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | செலுத்த வேண்டிய மீதிகள் | | |
| | (i) மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு வழங்கல் கடன் கொடுத்தோர் மீதி ரூபா 57,702,714 தொகையினுள் கொடுப்பனவு நிலுவையாக காணப்பட்ட காலம் 1 வருடத்திற்கு 3 இடைப்பட்ட ரூபா 30,580,208 தொகையாக இருந்தது. | - மேற்படி - | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| | (ii) நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் மீதி ரூபா 37,073,169 தொகையாக இருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 3.3 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான கூட்டுத்தொகை ரூபா 1,742,000 தொகை பெறுமதியான கை உளவு இயந்திரம் ஒன்று மற்றும் நீர் பவுசர் ஒன்று பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது. | நிதி மற்றும் கொள்கைக் குழுவின் பரிந்துரையின் படி சாக்கடை பவுசர் புதுப்பிக்கப்படும் என. | புதுப்பிக்கப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற 8 நூலகங்களினால் எடுத்துச் சென்று திருப்ப ஒப்படைக்கப்படாத ரூபா 476,079 தொகை பெறுமதியான 1350 புத்தகங்கள் மற்றும் கணிப்பீட்டிற்கு சமர்பிக்கப்பட்டிருக்காத ரூபா 424,746 தொகை பெறுமதியான 1460 புத்தகங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | குறிப்பிட்ட நூலகங்களுக்கு அறிவிக்கப்பட்டு தகவல்கள் கிடைப்பட்டு வருவதுடன், சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன் என. | நட்டத்தை அறவீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | ரூபா 3,500,000 தொகை பெறுமதியான பேலியகொட நகர சபையிலிருந்து கிடைத்திருந்த பெக்கோ இயந்திரத்தின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிமையை உரித்தாக்க வேண்டும். |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊழியர் கடன்<br>இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள, ஓய்வு பெற்றுள்ள, இறந்துள்ள ஏழு உத்தியோகத்தர்களிடம் கடன் மற்றும் முற்பண மீதி ரூபா 1,158,543 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | பிணையாளர் ஓய்வு பெற்றிருத்தல், வெளிநாடு சென்றிருத்தல், இறப்புப் பணிக்கொடை கிடைத்திருக்காமை, ஓய்வூதிய பணிக்கொடை கிடைத்திருக்காமை ஆகிய காரணங்களினால் அறவீடு செய்ய முடியாமல் இருந்தது. | ஊழியர் கடன் அறவீடு செய்யப்பட வேண்டும். |